# THIRUMARAI AASAAN



S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 30 Aug 2017 Issue - 8


ஆசிரியர் உரை

## மூன்று கெஞ்சல்கள்

**தா**ன் விரும்பும் ஒன்றை அல்லது எதிர்பார்க்கும் ஒன்றை மற்றவர் செய்யும்படியாகச் செய்வதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. கட்டளையின் மூலம் அதை அறிவிக்கலாம். கேட்பதின் மூலம் செய்யலாம்,அறிவுரையின் மூலம் எடுத்துரைக்கலாம், ஆலோசனையின் மூலம் கேட்கலாம், வேண்டுதல் மூலம் வெளிப்படுத்தலாம், ஏன், கெஞ்சுதல் மூலம் கூட அது நடக்கலாம். பொதுவாக, இந்த வழிமுறைகள், சம்பந்தப்பட்ட இருவருக்கும் அல்லது இருதரப்புக்கும் உள்ள உறவு அல்லது தொடர்பை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். இங்கே, நான் குறிப்பிடும் இவ்வழிமுறைகளில் கடைசியாக வரும் " கெஞ்சுதல் " என்பது கடைசிக்கட்ட முயற்சியாகவே பெரும்பாலும் இருக்கும். அப்படிப்பட்ட இந்தக் கெஞ்சுதல், அநேகமாகத் தகுதி குறைந்த ஒருவரால், எல்லாவகையிலும் தங்களைக் காட்டிலும் மேலான தகுதியுள்ள ஒருவரிடம் மேற்கொள்ளப்படும். இதுதான் பொதுவான நியதி.

ஆயினும், நம்முடைய பரிசுத்த வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில், சீர்மிகு அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுவதற்கான தகுதிகளை எல்லா வகையிலும் பெற்றுள்ள பவுலடியார், யூதர்களால் அதிகம் மதிக்கப்படாத புறவினத்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ரோமாபுரி சபையாரிடம் கெஞ்சியுள்ளார். வேதம் அறிந்தவர்கள் அப்படிக் கெஞ்சினார் என்று எங்கே உள்ளது என்று இங்கே கேட்கலாம். நியாயம்தான். கெஞ்சினார் என்னும் வார்த்தை தமிழ் வேதாகமத்தில் நேரடியாக இல்லை என்பது உண்மையே. ஆயினும் மூலமொழியில் கெஞ்சினார் என்பதற்கான வார்த்தை அல்லது அதற்கு

இணையான வார்த்தை உள்ளவே உள்ளது. ஆங்கில மொழியாக்கங்களிலும் இப்பொருளிலான வார்த்தைகள் இடம் பெறாமலில்லை.

ரோமாபுரியாருக்கான நிருபத்தில் மட்டுமல்ல வேறுசில சபையாருக்கும் எழுதின நிருபங்களிலும் இப்பொருளிலான வார்த்தைகள் இடம் பெற்றுள்ளது. சொல்லப்போனால், குறைந்தது ஒரு அறுபத்து நான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவைகளுக்குள் செல்வதற்கு முன்பாக நமது வழக்கத்தின்படியாக ரோமர் நிருபத்தின் பின்னணித் தகவல்களைத் தொட்டுச் செல்வோம்.

பவுலடியாராகிய இம்மாமனிதர் பதிமூன்று நிருபங்களை எழுதியுள்ளார். இவைகளில் முதலிடம் பிடிக்கும் தகுதியைப் பெற்றிருப்பது ரோமர் நிருபமே. நற்செய்தி நூல்கள் கிறிஸ்துவின் வார்த்தை பற்றியும், வாழ்க்கை பற்றியும் பேசும்போது, இந்நூல் கிறிஸ்துவின் தியாக மரணத்தின் மேன்மையை மெருகேற்றிக் காண்பிக்கிறது. கேள்வி பதில் பாணியில் ஒரு கொள்கை விளக்க நூலாக இது திகழ்கிறது. இந்நூலைப் படிக்கின்ற ஒவ்வொருவரும் மெய் கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டுமென்று ஊக்கப்படுத்துகிறது. பேதுருவினால் பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தின்போது மனமாற்றமடைந்தவர்களில் பலரும், பவுலடியார் ஆசியா, மக்கெதோனியா, கிரேக்கு போன்ற நாடுகளில் நற்செய்திப் பயணம் மேற்கொண்டபோது, மனமாற்றப்பட்ட புறவினத்தார் பலரும் இச்சபையில் இருந்திருக்க வாய்ப்புண்டு. இப்படிப்பட்ட சபையாருக்கு கொரிந்துப் பட்டணத்திலிருந்து பவுலடியார் கி.பி.57 ல் இந்நிருபத்தை எழுதியுள்ளார்.

பொதுவாக, கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் உபதேசத்தையும் ஏற்றுக்கொண்டவர்கள் அதிலே நிலைத்திருக்க வேண்டுமென்பதில் பவுலடியார் அதீத அக்கறை காட்டுவார். அவருடைய பேச்சுக்களும், எழுத்துக்களுமே அதற்குச் சான்று. கிறிஸ்துவை எல்லா வகையிலும் அவர் பின்பற்றினபடியால் (I கொரி 11 : 1) கிறிஸ்துவுக்கு இருந்த ஆத்துமபாரம் இவரிடமும் காணப்பட்டது. கொரிந்தியருக்கு எழுதும்போது அன்றியும், **நீங்கள் துக்கப்படும்படிக்கு எழுதாமல், உங்கள் மேல் நான் வைத்த அன்பின் மிகுதியை நீங்கள் அறியும்படிக்கே, மிகுந்த வியாகுலமும் மன இருக்கமும் அடைந்தவனாக அதிகக் கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன்** என்று கூறுகிறார் (II கொரி 2 : 4). இன்னும், இதே நூலில் **இவை முதலானவைகளையல்லாமல், எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது** என்கிறார் (II கொரி 8 : 25).

இப்படிப்பட்ட மேலான சிந்தை, கிறிஸ்துவின் சிந்தை இவருக்குள்ளாகக் கொழுந்துவிட்டு எரிந்தபடியால்தான் கெஞ்சி எழுதுவதைக் கேவலமாக எண்ணாமல், எப்படியாவது கிறிஸ்தவர்கள், தேவனுடைய பார்வையில் நீதிமான்களாகக் காணப்படவேண்டுமென்று படாதபாடு பட்டுள்ளார். ஆவிக்குரிய ரீதியில், என்னதான் சொல்லுகிறார்கள் என்று செவிகொடுத்துக் கேட்பதையும், இன்னும் போதிக்கப்படுபவைகளில் இது தெரியவில்லை, அது புரியவில்லை என்று கேட்பதையும் தவறாக நினைக்கும் நாம் எங்கே? பிறரின் ஆவிக்குரிய நன்மைகளுக்காக கெஞ்சுவதற்குக்கூடத் தயங்காத பவுல் எங்கே? சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

**I புத்தியுள்ள ஆராதனைக்காகக் கெஞ்சுகிறார் ( ரோமர் 12 : 1 )**

பவுலடியாரின் மூன்று கெஞ்சல்களில் முதலாவதாக நாம் பார்க்க இருப்பது, புத்தியுள்ள ஆராதனைக்கான கெஞ்சல் பற்றியது.

தேர்ந்த மொழிநடை கொண்டு எழுதப்பட்ட ரோமர் நிருபத்தின் அதிகாரங்களில் சிறப்பானது அதிகாரம் 12. தேவனிடத்திலும், சக மனிதனிடத்திலும் ஒரு கிறிஸ்தவனுக்கான பொறுப்பு எத்தகையது என்பது பற்றி இவ்வதிகாரம் அதிகமாகப் பேசுகிறது. அப்படிப் பேசும் முதல் பகுதியின் முதல் வசனத்தைக் கவனியுங்கள். **அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன் (கெஞ்சுகிறேன்), இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை** (ரோமர் 12 : 1) என்று. அதாவது, ஆராதனை தேவனுக்காகப் பிரியமானதாக இருக்க வேண்டுமானால் அது புத்தியுள்ளதாக இருக்க வேண்டும். இன்னும், ஆவியும், ஆத்துமாவும் மட்டுமல்ல, சரீரமும் பரிசுத்தமானதாக இருக்க வேண்டுமென்று கெஞ்சியுள்ளார்.

இவ்வசனத்தில் வரும் ஆராதனை என்ற வார்த்தையை நான் இங்கே நேரடியான பொருளில் எடுத்துக்கொள்கிறேன். பவுலடியாரின் கெஞ்சுதல் படி, தேவனுக்காகச் செய்யப்படும் ஒன்று அர்த்தமுள்ளதாக, புத்தியுள்ளதாக இருக்க வேண்டும். அதில் ஆராதனையும் அடக்கம். புதிய ஏற்பாடு நான்கு வகையான ஆராதனை பற்றிப் பேசுகிறது. ஆயினும், இந்த நான்கு வகைகளில் ஏதாவது ஒருவகையில் ஆராதித்தால் கூட தேவன் அதை ஏற்றுக்கொள்வார் என்று போதிப்பதில்லை. ஒருவேளை, எப்படி வேண்டுமானாலும் ஆராதிக்கலாம், அதில் தவறேதும் இல்லையென்று வாதிடுவோமானால், இங்கே பவுலடியார் புத்தியுள்ள ஆராதனைக்காகக் கெஞ்ச வேண்டிய அவசியமில்லையே. அந்தக் கெஞ்சலே எல்லா ஆராதனைகளும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவைகள் அல்ல என்பதைத்தானே எடுத்துச் சொல்லுகிறது.

புதிய ஏற்பாட்டு வசனங்களில் காணப்படும் நான்கு வகையான ஆராதனைகளைக் கவனியுங்கள். 1.அறியாமல் செய்யப்படும் ஆராதனை (அப். 17 : 1) 2. சுய இஷ்டமான ஆராதனை (கொலோ. 3 : 23) 3. வீணான ஆராதனை (மத் 15 : 9) மற்றும் 4. உண்மையான ஆராதனை (யோவான் 4 : 24). இந்த உண்மையுள்ள ஆராதனை தான் புத்தியுள்ள ஆராதனை. மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது போல, கூட்டமாகச் சேர்ந்துகொண்டு தேவனுடைய நாமத்தை உச்சரித்து ஏறெடுக்கப்படும் எல்லாமே தேவன் பிரியப்படும் ஆராதனையாக இருக்க முடியாது. எது தேவனுக்குப் பிரியமான ஆராதனை என்பதற்கான விளக்கம், இயேசுவால் சமாரியப் பெண்ணுடனான உரையாடலின்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் **ஆவியோடும், உண்மையோடும்** அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் (யோவான் 4 : 21) என்று.

அப்படியானால், அருமையானவர்களே தேவன் மீது நம்பிக்கை கொண்டு, வாரந்தோறும் நாம் ஒவ்வொருவரும் ஏறெடுக்கும் ஆராதனை எப்படிப்பட்ட ஆராதனையாக உள்ளது? தவறான முறையில் ஆராதனை செய்பவர்கள் கூட, அது சரியானது என்ற நினைப்போடு ஆராதிக்கிறபடியால் தான், எல்லாவற்றையும் சோதித்தறிகிற தேவன், அப்படிப்பட்ட ஆராதனைகள் எந்த ரகத்தைச் சேர்ந்ததென்று தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார். எல்லா ஆராதனைகளும் சரியென்றால், மற்ற ஆராதனைகளைப் பற்றி பேசியிருக்க வேண்டிய அவசியமில்லையே. யோவான் 4 : 24 –ம் வசனம் மூன்று உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

1. தேவனை ஆராதிக்க வேண்டியது அவசியம். 2. அந்த ஆராதனை ஆவியோடு இருக்க வேண்டும். அதாவது, நேர்மையானதாக, சரியான மனநிலை கொண்டதாக இருக்க வேண்டும். 3. ஆராதனை தேவனுடைய வார்த்தைகள் வழிநடத்துகிற சத்தியத்தின்படி இருக்க வேண்டும் (கொலே 3 : 17 ; யோவான் 17 : 12) .

சத்தியத்தின்படி என்று சொல்லும்போது, அந்தச் சத்தியமாகிய வேத வசனங்கள் (யோவான் 17:17) ஆராதனைக்காகக் கொடுத்திருக்கும் இந்த ஐந்து பங்குகளைப் பாருங்கள் **1.** பாடல் (எபெ. 5 : 19; I கொரி. 14 : 15). **2.** ஜெபம் (அப். 2 : 42; I தீமோ. 2 : 1) **3.** வேதவாசிப்பு / செய்தி (அப்.20 : 7;மாற்கு 16 : 15). **4.** கர்த்தரின் பந்தி ( அப் 20 : 7 ; I கொரி 10 : 16 ). **5.**கர்த்தருக்குக் கொடுத்தல் ( I கொரி. 16 : 2; II கொரி 8 : 2). இந்த ஐந்து பங்குகளும் நம்முடைய தொழுகையில் வாரந்தோறும் இல்லையென்றால், நம்முடைய ஆராதனை வீணான ஒன்றாகவோ, அறியாத ஒன்றாகவோ, சுய இஷ்டமான ஒன்றாகவோ மாறிப்போகும். இதில் எவ்வித சந்தேகமும் யாருக்கும் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவேளை,

ஆயிரக்கணக்கில் கூடி, மிகுந்த ஆர்ப்பாட்டத்தோடு ஆராதனை ஏறெடுக்கப்பட்டாலும், வசனத்துக்கு மாற்றான ஒன்றில் தேவன் ஒருபோதும் பிரியப்படமாட்டார்.

இந்த உண்மை பவுலடியாருக்குத் தெரிந்தபடியால் தான், தேவனுக்குப் பிரியமற்ற ஒன்றாக அவர்களுடைய பக்தி காரியங்கள், குறிப்பாக ரோமச் சபையாரின் ஆராதனை இருந்துவிடக்கூடாது என்று கெஞ்சியுள்ளார். அவரின் அந்தக் கெஞ்சல் அவர்களுக்கானது மட்டும் தான் என்று எண்ணி நாம் ஏமாந்து போகக்கூடாது. நம்மிடமும் தேவனுக்குப் பிரியமில்லாத ஆராதனை இருந்துவிடகூடாது என்று இவ்வசனங்கள் மூலம் கெஞ்சுகிறார். பவுலடியார் கெஞ்சினார் என்பதைவிட, ஆவியானவர் நம்மிடம் கெஞ்சுகிறார் என்பதே சரியானது. ஆவியானவரின் கெஞ்சலுக்குச் செவிகொடுக்கப் போகிறோமா? அல்லது எப்போதும்போல அடம்பிடிக்கப் போகிறோமா?

II **போராடி ஜெபியுங்கள் என்று கெஞ்சுகிறார் ( 15 : 30 32 )**

பவுலடியாரின் மூன்று கெஞ்சல்களில் இரண்டாவதாக நாம் பார்க்க இருப்பது போராடி ஜெபிக்க வேண்டும் என்பது பற்றியது.

ஜெபம் தேவனை விசுவாசிப்பவர்களுக்குக் கிடைத்திருக்கும் ஒரு பாக்கியம். சர்வவல்ல தேவனோடு பேசும் சிலாக்கியத்தை நாம் ஜெபத்தின் மூலம் பெறுகிறோம். தேவனை நோக்கி ஜெபிக்கும் ஒருவன் தேவனுடைய வல்லமையை அங்கீகரிக்கிறான். தேவனைலே எல்லாம் கூடும் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறான். வேண்டிக்கொள்ளுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் தேவனால் நமக்குள்ளே கிரியை செய்ய முடியும் என்பதை அங்கீகரிக்கிறான்.

இரட்சகராகிய இயேசுவானவர் இப்பூமியில் இருந்தபோது ஜெப வீரராகவே திகழ்ந்தார். தனிமையில் ஜெபித்திருக்கிறார் ( மத் 14 : 23 ), இராமுழுவதும் ஜெபித்திருக்கிறார் (லூக்கா 6 : 12). மிகுந்த ஊக்கத்தோடே ஜெபித்துள்ளார் (லூக்கா 22 : 44). இந்த இயேசுவை எல்லாவகையிலும் பின்பற்றின பவுலடியார் ஜெபிப்பதிலும் அவரைப் பின்பற்றியே வாழ்ந்துள்ளார். தான் பின்பற்றியதோடு, பிறரும் ஜெபிப்பதில் தன்னைப்போல இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டுள்ளார். ரோமாபுரி சபையார் இக்காரியத்தில் குறைவுள்ளவர்களாக இருந்துவிடக்கூடாது என்று எண்ணியே இவ்விதம் எழுதியுள்ளார். **யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கும் நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்கு செய்யப்போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கிகரிக்கப்படும்படிக்கும் நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில் நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடு கூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்** ( ரோமர் 15:31,32).

பவுலடியார் இங்கே போராடி ஜெபியுங்கள் என்று கெஞ்சுகிறார். ஜெபத்தின் மூலம் பிறருடைய மனதிலே மாற்றம் கொண்டுவர முடியும் என்பதில் அவருக்கு அபார நம்பிக்கை இருந்திருக்கிறது. அவிசுவாசிகளுக்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும் என்பதை நாம் கவனிக்க வேண்டும். தவறுகளும், பிரச்சினைகளும் எல்லாரிடமும் இருக்க முடியும். தேவன் எல்லாருக்கும் தேவனாக இருக்கிறார். எல்லாரும் அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறார்கள். சர்வவல்ல தேவன் யாரிடத்தில் வேண்டுமானாலும் கிரியை செய்ய முடியும். தேவன் அப்படிக் கிரியை நடப்பிப்பதற்கு ஒப்புக்கு ஏறெடுக்கப்படும் ஜெபம் போதாது. போராடி ஜெபிக்க வேண்டியது அவசியம்.

அருமையானவர்களே! நம்மில் எத்தனைபேர் ஜெபத்தின் உண்மைகளையும், ஜெபத்தின் வல்லமையையும் அறிந்து உணர்ந்தவர்களாக நம்முடைய பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளோம்? ஆதிக் கிறிஸ்தவர்கள் ஜெபத்திலே உறுதியாய் தரித்திருந்திருக்கிறார்கள் ( அப். 2 : 42 ). இந்த ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு ஏற்கனவே ஜெபத்தில் உறுதியாய் இருங்கள் என்று சொல்லியுள்ளார் ( 12 ; 12 ). இங்கே போராடி ஜெபியுங்கள் என்று கெஞ்சுகிறார். பவுலடியாரும், ரோமக் கிறிஸ்தவர்களும் போராடி ஜெபித்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். எப்படியெனில், அந்தப் பிரயாணத்தில் பவுலுக்கு யூத விசுவாசிகளால் எத்தீங்கும் நேரவில்லை. அத்தோடு, எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள், பவுல் புறவினத்தாரிடத்திலிருந்து கொண்டு வந்த தர்ம சகாயமும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது (அப். 21:17).

ஜெபம் பற்றி இப்படியாக நாம் பார்க்கும்போது கூடவே இன்னொரு கேள்வி எழும்புகிறது. அது யார் ஜெபித்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது. இது ஒரு நல்ல கேள்வி. இதற்கும் நம் வேதத்தில் பதில் உண்டு. ஆம், பிறவியிலேயே பார்வையற்றவனாயிருந்து இயேசுவின் வல்லமையால் சுகம் பெற்றவனை, இயேசுவுக்கு எதிரான பரிசேயர்கள், கேள்விகளால் துளைத்து வாட்டி வதைத்தனர். அவர்களோடு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட குருடன் ஒருகட்டத்தில் பொறுமையிழந்து, **பாவிகளுக்குத் தேவன் செவிகொடுப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்** என்று பிரசங்கித்தான் ( யோவான் 9 : 31 ). இதே கருத்தை பேதுரு அப்போஸ்தலன் இவ்விதம் எடுத்துரைக்கிறார். **கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது** (I பேதுரு 3 : 12) என்று.

ஆம், ஜெபம் கேட்கப்பட வேண்டுமானால், பாவிகளாயிராமல் நீதிமான்களாய் இருக்க வேண்டும். ரோம சபையார்கள் நீதிமான்களாய் இருந்தபடியால் தான் பவுல் அவர்களை போராடி ஜெபியுங்கள் என்று கெஞ்சினார். அவர்கள் எப்படி நீதிமான்களாக மாறினார்கள்? இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டுள்ளார்கள் ( ரோமர் 1 : 16,17 ). கிறிஸ்துவின் நற்செய்தியின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்ததின் மூலம். அதாவது, விசுவாசித்து ( மாற்கு 16 : 16 ), மனந்திரும்பி ( அப் 2 : 38 ), இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு ( ரோமர் 10 : 10 ). பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று நீதிமான்களாகியுள்ளார்கள் (அப். 22 :16). நீதிமான்களாவதற்கு வேறு குறுக்குவழி கிடையாது. ஜெபத்தின் மூலம், தேவனிடமிருந்து நன்மை பெறவிரும்பும் ஒவ்வொருவரும் இவ்வுண்மையைப் புரிந்து ஜெப வாழ்க்கையை நடத்துவது நல்லது. அதுதான் ஆசீர்வாதத்தைப் பெற்றுத்தரும்.

III **உபதேசத்தில் எச்சரிக்கையாயிருங்கள் என்று கெஞ்சினார் ( 16 : 17 )**

பவுலடியாரின் மூன்று கெஞ்சல்களில் மூன்றாவதாக நாம் பார்க்க இருப்பது, உபதேசத்தில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்பது பற்றியது.

வேதாகமம் எடுத்துச் சொல்லும் மெய் கிறிஸ்தவம் தழைக்காமல் இருப்பதற்கு யார் எதிரிகள்? என்ற கேள்வியோடு ஒரு விவாதத்தை உள்ள சுத்தியோடு நடத்தினால் அதன் யதார்த்தமான முடிவு கிறிஸ்தவ சமுதாயம் என்பதாகத்தான் இருக்கும். நான் இப்படிக் கூறுவதற்காகக் கோபப்படாதீர்கள். உண்மை பல நேரங்களில் சூடாகத்தான் இருக்கும். நம் ஒவ்வொருவருக்காகவும் வந்த இயேசுவானவர் தன் ஊழியத்தின் இறுதியில் என்ன ஜெபித்தார்? எதற்காக ஜெபித்தார்? நன்றாகக் கவனியுங்கள். **நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தைகளால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்** (யோவான் 17 : 20,21). இவ்வார்த்தைகள் இயேசுவின் மரண வாக்குமூலம்.

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டுமென்று கிறிஸ்து பாரத்தோடே ஜெபித்தார் தானே ! உண்மைதானே ! ஆனால் கிறிஸ்தவம் ஒன்றாயிருக்கிறதா? நெஞ்சிலே கையை வைத்துச் சிந்தியுங்கள். இப்பொழுது சொல்லுங்கள் கிறிஸ்தவம் ஒன்றாயிருக்கிறதா? சுக்குநூறாக உடைந்து பல கூறுகளாகப் பிரிந்துதானே கிடக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? உபதேசத்தில், கிறிஸ்துவின் உபதேசத்தில், அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உண்மையில்லாமல் கிறிஸ்தவம் வழிதவறிப்போனது தான். இது உண்மையிலும் உண்மை. கிறிஸ்தவத்தில் காணப்படும் ஆயிரக்கணக்கிலான இப்பிரிவினைகள்

கிறிஸ்து ஆண்டவரின் ஜெபத்தை அவமாக்கவில்லையா? இப்படி அவமாக்கியிருப்பவர்கள் வேறு யாருமல்ல, நாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று மார் தட்டுகிற கிறிஸ்தவ சமுதாயம் தான்.

இவ்வளவு பிரிவுகளுக்குள்ளாக ஒற்றுமை சாத்தியமில்லையென்பது நம் எண்ணமாக இருக்குமானால், சாத்தியமில்லாத ஒன்றுக்காக இயேசு இவ்விதம் ஜெபித்துள்ளார் என்றுதான் பொருள். அப்படித்தானே? அப்படியானால் எது சாத்தியம், எது சாத்தியமில்லையென்பது தேவகுமாரனுக்குத் தெரியாமல் போய்விட்டதா? அவர் அவ்வளவு பெலவீனமானவரா? சொல்லுங்கள். இல்லை, இல்லவே இல்லை. அவர் பெலனுள்ளவர். சந்தேகம் வேண்டாம். ஆயினும் கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள், ஏதோ ஒரு கட்டத்தில் உபதேசத்தில் தடுமாறி தவறு செய்திருக்கிறார்கள். அந்த வித்து விருட்சமாகி இன்றைக்கு ஒட்டுமொத்த கிறிஸ்தவத்தையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

பெந்தெகொஸ்தே நாளில், பேதுருவின் மகா பிரசங்கத்தால் மனமாற்றப்பட்ட கிறிஸ்தவர்கள், " அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் ( அப். 2:42 ). அப்போஸ்தலர்கள் அந்த உபதேசத்தை, கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள் ( யோவான் 14:26; 16:13 ). ஆக, அப்போஸ்தலருடைய உபதேசம் கிறிஸ்துவின் உபதேசம்தான். இந்த உபதேசந்தான் அப்போஸ்தலர்களைக் கொண்டு புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொருவரும் நடக்க வேண்டியது அவசியம். இந்த உபதேசத்தின்படி நடக்கவேண்டிய அவசியத்தை யோவான் அப்போஸ்தலன் எங்ஙனம் எடுத்துரைக்கிறார் பாருங்கள். **கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன்** ( 2 யோவான் 9) என்று.

அருமையானவர்களே! நம்முடைய பக்தி வாழ்வில் கிறிஸ்துவின் உபதேசம் எப்படிப்பட்ட பங்கை வகிக்கிறது? ரோமச் சபையிலே கிறிஸ்துவின் உபதேசத்திற்கு மாறாகப் பேசி, பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்கினவர்களை விட்டுவிலகவேண்டுமென்று பவுலடியார் கெஞ்சியுள்ளார் என்பது நினைவிருக்கட்டும். சபையாரை இப்படிக் கெஞ்சுகிற அளவுக்கு பவுலடியாருக்கு உபதேசம் முக்கியமானதாக இருந்துள்ளது. ஆனால், நமக்கு? சிந்திப்போம். உபதேசத் தவறு நம் பக்தி வாழ்வில் இருக்குமானால், எந்தக் கௌரவமும் பாராமல் பவுலடியாரின் கெஞ்சலுக்கு மதிப்புக் கொடுத்து மெய் கிறிஸ்தவம் தழைக்க நம்மை சமூலமாய் ஒப்புக்கொடுப்பது அவசியம். நாம் பரலோகம் செல்ல இது மிகவும் முக்கியம். ஆமென். ●

# தேற்றரவாளனின் வாக்குத்தத்தம்

Bro. J.C. சோட்

**வேத** வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளன் என அழைக்கப்படுகிறார். இங்கு தேற்றரவாளனின் வாக்குத்தத்தம் பற்றி நாம் காண்போம்.

பாவிகளை இரட்சிக்க இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் ( I தீமோ. 1 : 15 ) வீழ்ந்து போனவர்களைத் தேடவும் அவர்களை இரட்சிக்கவும் அவர் வந்தார் என்று நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. (லூக்கா 19 : 10 ) இருந்தபோதும், கிறிஸ்து பாவமற்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்து, நல்லவற்றை மட்டுமே செய்து கொண்டு வந்தார் என்பது உண்மையாக இருப்பினும், அவருக்கு எதிரிகள் இருந்தனர் என்பதும், இறுதியாக கொடூரமான சிலுவையில் அறையப்பட்டு மரிக்க இருந்தார் என்பதும் கசப்பான உண்மைகளே. இதை அவர் அறிந்திருந்தார். எனவே, அவருடைய ஊழியம் தொடர்ந்து நடைபெறத்தக்கதாக, அப்போஸ்தலர்கள் என அழைக்கப்பட்ட 12 மனிதர்களை அவர் தேர்ந்தெடுத்து, போதித்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, இவ்வுலதிலிருந்து அவர் எடுத்துக் கொள்ளப்பட்டதும் அவருடைய பணியைத் தொடர அவர்களைத் தயார்படுத்தினார். என்றாலும், அவர்கள் தவறுகளைச் செய்யக்கூடிய மனிதர்கள் என்பதையும் அவர் அறிந்திருந்தார். எனவே, அவர் உபதேசித்திருந்த பல காரியங்களை, ஒருவேளை அவர்கள் மறந்துவிடக்கூடும் என்பதாலும் அல்லது இவ்வுலகிற்கு அவர் அறிவிக்க விரும்பிய பல சத்தியங்களை அவர்களால் புரிந்துகொள்ள இயலாமல் போகும் என்பதாலும், அவர்கள் சரியாக வழி நடத்தப்படவும், கற்பிக்கப்படவும், அவர் சென்றபின் நிச்சயமாக, தேற்றரவாளனை அனுப்புவதாக அவர்களுக்கு வாக்களித்தார்.

இப்போதும், புதிய எற்பாட்டில் யோவான் புத்தகத்திற்கு என்னோடு வாருங்கள். தேற்றரவாளனைப் பற்றி அதில் எழுதப்பட்டுள்ள சில குறிப்புகளை நாம் படிப்போம். அப்போஸ்தலர்களிடம் பேசும்போது, இயேசு கூறினார்: **நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது: அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சக் காலத்தில் உலகம் என்னைக் காணாது. நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிற**

படியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும் நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார் (யோவான் 14 : 16-21).

தொடர்ந்து, கிறிஸ்து அப்போஸ்தலர்களிடம் கூறினார் : என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக : நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில், என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார் ". ( யோவான் 14 : 26-28 ) என்றார்.

பின்னர், கிறிஸ்து மேலும் தெளிவாக : பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது , அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் ( யோவான் 15 : 26-27). தொடர்ந்து படிக்கும்போது, அவர் கூறுகிறார். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும் நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்தில் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயத்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். இன்னும் அநேககாரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல

சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரபோகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்தில் என்னைக் காண்பீர்கள் என்றார் (யோவான் 16 : 7-16).

**இப்பொழுது, மேலே கண்ட எல்லா வசனங்களிலும் கீழ்க்கண்ட உண்மைகள் வெளியாகின்றன.**

- ❊ கிறிஸ்து இங்கே அப்போஸ்தலர்களிடம் மட்டுமே பேசிக் கொண்டிருக்கிறார்.
- ❊ எனவே, தேற்றரவாளனை அவர்களுக்கு மட்டுமே அவர் வாக்களித்தார். உலகத்திற்கு அல்ல, பிற சீடர்களுக்கும் கூட அல்ல.
- ❊ தேற்றரவாளன், பரிசுத்த ஆவியானவர் என அடையாளங் காட்டப்படுகிறார்.
- ❊ கர்த்தர் பரலோகத்திற்குச் சென்ற பின்னர், தேற்றரவாளன் அப்போஸ்தலர்கள் மேல் வரவிருந்தார்.
- ❊ தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு இருப்பார். இயேசு உபதேசித்தவைகளையெல்லாம் அவர்களுக்கு நினைப்பூட்ட உதவுவார். எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார், வரப்போகிற காரியங்களை வெளிப்படுத்துவார், பிற மொழிகளிலே பேசவும் அற்புதங்களைச் செய்யவும் வல்லமையைக் கொடுப்பார்.
- ❊ கிறிஸ்து மாத்திரமே அவர்களுக்குத் தேற்றரவாளனை அனுப்ப முடியும்.
- ❊ கர்த்தரோடு ஆரம்ப காலத்திலிருந்தே இருந்த அப்போஸ்தலர்கள், தேற்றரவாளனோடு, கர்த்தருக்குச் சாட்சியாக இருப்பார்கள்.

அப்போஸ்தலர்களின் மேல் பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கர்த்தர் வாக்களித்தைப் பற்றியும் லூக்கா பேசுகிறார். கர்த்தரின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், அவர் அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானார் : அவர்களை நோக்கி : மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து

எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி : எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும்; மூன்றாம் நாளில் மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவும் வேண்டியதாயிருக்கிறது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசேலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக்கொண்டு போய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களைவிட்டுப் பிரிந்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவரைப் பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாதோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள். ஆமென்" (லூக்கா 24 : 44 - 53).

பின்னர் லூக்கா, இந்தக் காட்சியை அப்போஸ்தலருடைய நடபடிகள் 1 ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக கர்த்தர் அப்போஸ்தலர்களுக்கு வாக்களித்ததைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதினார். பின்னர், பரிசுத்த ஆவியானவர்அல்லது தேற்றரவாளன் எப்படி அப்போஸ்தலர்கள் மேல் இறங்கினார் என்றும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவர்கள் எதைச் செய்வார்கள் எனக் கர்த்தர் கூறினாரோ அவற்றை அவர்கள் செய்யத் தொடங்கினார்கள் என்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 ம் அதிகாரத்தில் அவர் சொல்லுகிறார்.

இப்போது, தேற்றரவாளன் யாருக்கு வாக்களிக்கப்பட்டிருந்தார்? சந்தேகமின்றி, அப்போஸ்தலர்களுக்கு மாத்திரமே. தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவரை யார் பெற்றக்கொண்டார்கள் மீண்டும் அப்போஸ்தலர்கள் மட்டுமே. அப்படியானால், 120 பேர் அங்கு கூடியிருந்தார்களே அவர்களைப் பற்றி என்ன? மீண்டும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அப்போஸ்தலர்கள் தவிர வேறு யாரும் பெற்றுக்கொள்ளவில்லை. இன்றும், எவரும் அற்புதங்கள் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெறுவதில்லை. பெற முடியாது இதற்கு மாறாகப் போதிக்கின்றவர்கள், ஆவியானவருடைய வார்த்தைகளுக்கு முரணாகவே போதிக்கின்றனர். ●

# பரிசுத்த ஆவியானவரால் நற்சாட்சி பெற்றவர்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்தவ உலகிலே அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றி தெரிந்தவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அப். 7 : 58-ல் நாம் வாசிக்கிறபடி, பவுலினுடைய பெயர் சவுல் என்பதாகும். பவுல் சிலியா நாட்டுக்குத் தலைநகரமாகிய தர்சு என்னப்பட்ட ஊரிலே பிறந்தார். எருசலேமிலே கனம் பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் கொடுத்த போதனையை கற்றுக் கொண்டார்.

அப்போஸ்தலன் பவுல் 13 நிருபங்களை எழுதினார். அதில் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களிலும் பவுல் தேவையான அனைத்து ஆலோசனைகளையும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு தீமோத்தேயுவுக்கு அளிக்கிறார். விசுவாசத்தில் நான் பெற்ற உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவே என்று சொல்வது பவுல் தீமோத்தேயுவின் மேல் வைத்திருக்கும் அன்பும் நம்பிக்கையும் வெளிப்படுகிறது. சின்ன ஆசியாவில் பிறந்தவனாகிய இவனுடைய தகப்பன் கிரேக்கன், தாய் யூத ஸ்திரீ. இவன் தாயாகிய ஐனிக்கேயாளும், பாட்டியாகிய லோவிசாளும் இவனைச் சிறுபிராய முதலே யூதருடைய வேத சாஸ்திரத்தில் நன்றாய் பழக்கி வந்தார்கள். பவுல் முதல் முறை லீஸ்திராவுக்கு வரும்போது இவனும் இவனுடைய தாயாரும் கிறிஸ்தவ மார்க்கத்துக்கு வந்ததாகத் தோன்றுகிறது. ஏனென்றால், பவுல் இரண்டாந்தரம் வரும்போது தீமோத்தேயு சபையில் பெயர் பெற்றவனாயிருந்தான் (அப் 16 : 1) இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் இவனைத் தமக்குத் தோழனாக ஏற்படுத்திக்கொண்டார் ( அப். 16 : 3). பவுலோடு சுவிசேஷ வேலை செய்யும் பொருட்டு லீஸ்திராவிலுள்ள மூப்பர்களும், பவுலும் இவனைப் பிரதிஷ்டை செய்தார்கள் (1 தீமோத். 4 : 14 ; 2 தீமோத் 1 : 6).

பவுல் மூன்றாம் நற்செய்திப்பிரயாணம் பண்ணும்போது தீமோத்தேயு எபெசு பட்டணத்தில் பவுலோடு தங்கியிருந்து, பின்பு மக்கெதொனியாவுக்குப் போனான் (அப் 19 : 22). பவுல் ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருந்தபோது தீமோத்தேயு அவருடன் இருந்தான் ( பிலி 1 : 1 ; 2 : 9, கொலோ. 1:1 ; பிலோ. 1 ) பவுல் இரண்டாந்தரம் ரோமாபுரியில்

சிறைச்சாலையில் இருக்கும்போது தீமோத்தேயுவைத் தன்னிடம் வரும்படி அழைக்கிறார். (II தீமோத். 4 : 9, 21). இதற்கு பின்பு தீமோத்தேயு சிறைச்சாலையில் வைக்கப்பட்டான் (எபி. 13 : 23).

பிரியமானவர்களே, மேலே நாம் படித்த காரியங்கள் இளைஞன் தீமோத்தேயுவைப் பற்றி ஓரளவு புரிந்துகொள்ள உதவியாயிருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதும்போதுதான் பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு இப்படியாகக் கூறுகிறார். உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூறுகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனசாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோரித்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்து; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன் (தீமோத். 1: 4, 5). ஒரு தீவிரமான ஊழியத்தை தீமோத்தேயு செய்தானென்றால், அதற்குக் காரணம் அவனுக்குள்ளிருந்த மாயாற்ற விசுவாசம். இந்த மாயமற்ற விசுவாசம் அவனுக்கு எப்படிக் கிட்டியது? இந்த மாயமற்ற விசுவாசம் அவனுக்கு தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தை கற்றுக் கொடுத்ததினால் தான் அவன் இவ்வளவு சீக்கிரம் அப்போஸ்தலன் பவுலோடு சேர்ந்து பலமாய் உபயோகப்படுத்தப்பட்டான். வாலிப வயதிலேயே சுவிசேஷப் பயணம் செய்ய முடிந்தது.

இன்றைக்குள்ள தாய்மார்கள் எத்தனைபேர் ஐனிக்கேயாளைப்போல இருக்கிறோம்? தேவன் விசுவாசம் வைப்பதற்குப் பதில் உலகத்திலும், உலகத்திலுள்ள காரியங்களிலும் விசுவாசம் வைக்க நம் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். உலகக் கல்வி, ஞானம், அறிவு, கேள்வி இவைகளில் தன் மக்கள் சிறந்து விளங்க வேண்டும். பேரும், புகழும் பெற வேண்டும் என்றுதான் அநேக தாய்மார்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள். தேவனுக்கடுத்த காரியங்களைத் தவிர மற்ற எல்லாமே இக்கால இளைஞர்களுக்குத் தெரிகிறது. விசுவாசமில்லாமல் பிள்ளைகள் வளர்கிறார்களென்றால் அதற்குக் காரணம் பெற்றோர் தான்; அதிலும் குறிப்பாக தாய்மார்கள் தான் காரணம்.

II தீமோத். 3 : 15-ல் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாவத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவன் என்று உனக்குத் தெரியும் என பவுல் கூறுகிறார். சிறுவயது முதல்

தீமோத்தேயு வேதத்தை நேசித்தான், வாசித்தான். இவ்வாறு செய்ய வைத்தது அவன் தாய், நாமும் கூட நம் பிள்ளைகளை சிறுவயது முதற்கொண்டே வசனங்களை வாசிக்கச் செய்ய வேண்டும். அது அவர்களுக்கு எதிர்காலத்தில் ஆசீர்வாதமுள்ளதாக அமையும். சங்கீதக்காரன் கூறும்போது **உம்முடைய கட்டளைகளைக் கைக்கொண்டிருக்கிறபடியால் முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருக்கிபடியால் எனக்குப் போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்".** (சங். 119 : 99,100) என்று கூறுகிறார். வேத வசனம் ஒருவனை ஞானவானாக்குகிறது. இந்த இரகசியத்தை அறிந்து தான் ஐனிக்கேயாள் தன் மகனுக்கு வேதத்தை வாசிக்கக் கற்றுக்கொடுத்தாள் போலும்.

II தீமோத். 2 : 3-ல் **நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய்த் தீங்கநுபவி** என்று கூறுகிறார். இவ்விதமாக ஒரு பக்குவமான ஊழியனாக தீமோத்தேயு சிறந்து விளங்குகிறான். துன்பத்தினூடே சென்று சுவிசேஷத்தை அறிவிக்கிறான். சிறையில் அடைக்கப்படுகிறான். இப்படியெல்லாம் ஒரு நல்ல தீமோத்தேயுவை நாம் வேதத்தில் காணமுடிகிறதென்றால் அது அவள் தாயினுடைய முயற்சிதான்.

இந்த தாய்க்கு அந்த விசுவாமானது அவளுடைய தாயாகிய லோவிசாளுக்குள் இருந்து வந்தது. தாய், பாட்டி ஆகிய இருவருக்குள்ளும் இருந்த விசுவாசம்தான் தீமோத்தேயுவை வல்லமையுள்ளவனாக மாற்றியது.

கிறிஸ்துவுக்குள் அருமையான தாய்மார்களே! நாமும் நம் பிள்ளைகளைத் தேவனுக்காக வளர்போம். தேவனுக்கடுத்த காரியங்களுக்கு முதல் இடத்தை நம் பிள்ளைகள் கொடுக்க வேண்டும். முதலாம் நூற்றாண்டில் இளைஞன் தீமோத்தேயு விசுவாசமுள்ளவனாய் வாழ்ந்தானென்றால் இன்றைக்கு 21ம் நூற்றாண்டில் வாழும் நாமும் நம் பிள்ளைகளை தீமோத்தேயுக்களாக வளக்க முடியும். சுவிசேஷத்தை, உண்மை சத்தியத்தைக் கூற, வேதாகமத்தில் உள்ள ஒரே சபையை உலகிற்கு பறைசாற்ற இளைஞர்கள் தேவை. நம் பிள்ளைகளைத் தேவனுக்காய் அர்ப்பணிப்போம். நாமும் ஐனிக்கேயாளைபோல் இருப்போம். ஐனிக்கேயாளும், லோவிசாளும் பரிசுத்த ஆவியானவரால் கூறப்பட்டு வேதாகமத்தில் நற்சாட்சிப்பெற்றதுபோல, நாமும் தேவனால் நிறைவுகூரப்பட்டு நம் மக்களோடு பரலோகத்தில் தேவனோடு என்றென்றும் நிலைத்திருப்போம். அப்படி வாழ தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்வாராக! ●

வாலிபர் பகுதி

# ஒப்பிடமுடியாத தேவன்

சகோ. பென்னி மார்ட்டின்

பிரியமான வாலிப உள்ளங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நம் தேவன் யாரோடும் ஒப்பிடமுடியாதவராயிருக்கிறார். அவருக்கு எல்லையே இல்லை. நித்திய சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகராகிய தேவன் ஏசாயா தீர்க்கதரியைப் பார்த்து இவ்விதமாகக் கேட்கிறார் இப்படியிருக்க என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? என்னை யாருக்கு நிகராக்குவீர்கள்? உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளை சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இயக்கத் திட்டமாகப் புறப்படப்பண்ணி அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும் அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது. பூமியின் கடையாந்திரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை இளைப்படைவதுமில்லை. இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்து முடியாதது (ஏசாயா 40:25-28).

தேவனும் ஒரு மனிதனைப்போல பயமுள்ள, கவலையுள்ள நிச்சயமற்றவராக இருந்தால் உண்மையிலேயே இந்த உலகம் பயமுறுத்தக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கும். ஆனால், தேவன் தாம் மனுஷனல்ல, தாம் தேவனாயிருப்பதாக தம்மை வெளிப்படுத்தி இருக்கிறார் (ஏசியா 11 : 9). தேவன் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார் (ஏசாயா 6 : 1). முடிவில்லாத நித்திய, மாறாத தேவன் தாம் சிருஷ்டித்தவைகளிருந்து என்றென்றும் வேறுபட்டிருக்கிறார்.

தேவனைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனையும், தியானமும்தான் மனிதனுடைய உயரிய ஆசையாயிருக்கிறது. தெய்வீகத்தன்மை என்னும் மாபெரும் பாடத்தை மனிதன் தொடர்ந்து படித்துக்கொண்டும் ஆராய்ந்து கொண்டும் தான் இருக்கிறான். தேவன் ஒப்பிடமுடியாதவராயிருக்கிறபடியால், அவரைப்பற்றிய ஒவ்வொன்றும் அவருடைய தன்மையை விவரிக்கிறது. இப்போது நாம் தேவனுடைய ஒப்பிடமுடியாதவைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

## I தேவனுடைய ஒப்பிடமுடியாத குமாரன்

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒப்பிடமுடியாதவர். மத்தேயு 16 : 16 ல் அப்போஸ்தலனாகிய பேதுரு செய்த அறிக்கை நிச்சயமானதும், பகிரங்கமானதுமாகும். சீமோன் பேதுரு பிரதியுத்தமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றார். பிரியமானவர்களே புத்தரையோ முகமது நபியையோ கான்பூசியஸ் பார்த்து ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று அழைக்க முடியாது. வேதாகமத்தில் மோசே எலியா யோவான் போன்றோர்கூட இப்படியாக ஆழைக்கப்பட்டுவதற்கு பாத்திரவான்கள் அல்ல. நசரேனாகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர இந்த அறிக்கை வேறு யாருக்காவது பொருந்துமானால் அது மாயையிலும் மாயையாயிருக்கும்!

யாராலும் ஒப்பிடமுடியாத இயேசு கிறிஸ்து ஒரு புத்தகம்கூட எழுதினதில்லை. ஆனால் அவரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிற புத்தகங்களை ஒன்றுசேர்த்தால் உலகின் எல்லா நூலங்களிலும் உள்ள ஒட்டுமொத்த நூல்களைவிட அதிகமாக இருக்கும். அவர் ஒரு பாடல் கூட எழுதினதில்லை. ஆனால், உலகில் உள்ள எல்லா பாடல் ஆசிரியர்களும் பாட்டெழுத கருப்பொருளை அவர் அளித்திருக்கிறார். அவர் மருந்துவம் படிக்கவில்லை. ஆனால், உடைந்த உடல்களை சுகப்படுத்திய மருந்துவர்களைவிட அவர் அநேக உடைந்த உள்ளங்களை சுகப்படுத்தியிருக்கிறார்.

வான சாஸ்திரத்தில் அவர் ஒரு நட்சத்திரம், பூலோகவியலில் அவர் ஒரு பாறை, விலங்கியலில் அவர் ஒரு ஆட்டுக்குட்டி மற்றும் சிங்கம். அவர் பிணக்கத்தை இணக்கமாக்குபவர். எல்லா நோய்களையும் சுகப்படுத்துகிறவர். மாபெரும் மனிதர்களெல்லாம் இம்மண்ணில் வந்து போயிருக்கிறார்கள். ஆனால், இயேசு இன்றும் ஜீவிக்கிறார். ஏரோதுவால் அவரைக்கொல்ல முடியவில்லை அவரை வெல்ல முடியவில்லை. மரணத்தால் அவரை அழிக்க முடியவில்லை; கல்லறையால் அவரை தாங்கமுடியவில்லை. அவரே என்றென்றும் பூரணமானவர்.

ஒருமுறை ஒரு பிரசங்கியார் இப்படியாகச் சொன்னார் இயேசு மாத்திரமே ஈடுஇணையற்றவர், அவருக்கு ஒப்பானவர் எவருமில்லை என்று.

தேவனுடைய குமாரனின் ஈடுஇணையற்ற ஜீவியத்தை எப்பொழுதும் தனக்கு முன்பாக நம்முடைய வாழ்க்கையோடு வைத்துப்பார்க்கும்போது, வாழ்க்கையானது தெளிவானதாகவும், அறிவுப்பூர்வமானதுமாகிறது. கிறிஸ்துவுடனே சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன் என்று பவுல் சொன்னபோது அவர் காரியங்களைச் சரியான பார்வையில் பார்த்திருக்கிறார் (கலாத்தியார் 2 :20).

## II தேவனுடைய ஒப்பிடமுடியாத புத்தகம்

பல நூற்றாண்டுகளாக சந்தேகப் பேர்வழிகளின் சுத்தியலடியைத் தாங்குவதற்கு தேவனிடத்திலிருந்தும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டும் தெய்வீகப்பராமரிப்பில் பாதுகாக்கப்படதுமான வேத புத்தகத்தால் மட்டுமே முடியும். மனிதர்களால் அடிக்கடி நியாயந்தீர்க்கப்படுகிற வேதாகமம் அதற்கு மாறாக எல்லா மனிதர்களையும் கடைசி நாளில் நியாயந்தீர்க்கக் கூடியதாயிருக்கிறது (யோவான் 12 : 48) அது அழிக்க முடியாதது (மத்தேயு 24 : 35 ) அது மாறாதது ( சங்கீதம் 119 : 89 ) அது விசுவாசத்தை உண்டாக்குகிறது (யோவான் 20: 30,31).

வேதாகமம் மனிதனுடைய வழிகாட்டியாக இருந்து மனிதர் எப்படி வாழ வேண்டும் என்று போதிக்கிறது ( தீர்து 2 : 11,12; ரோமர் 12 : 12 ). இப்புத்தகம் அதன் ஆசிரியரைப்போலவே அசட்டைபண்ணப்பட்டது புறக்கணிக்கப்பட்டது. ஆயினும் மனிதர் தனக்கு ஆபத்துண்டாகும் படிக்கே வேதாகமத்தை நிராகரிக்கிறான். நீதி மொழிகள் 13 : 13 இப்படியாகச் சொல்கிறது திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்; கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான். நாம் வேதாகமத்தின் மீது எப்படிப்பட்ட மனப்பான்மையைக் கொண்டிருக்கிறோமோ அப்படித்தான் பரலோகமும் நம்மீதான மனப்பான்மையைக் கொண்டிருக்கும் தேவனுடைய ஒப்பிட முடியாத வேதாகமத்தை விட மதிப்பிலும் வல்லமையிலும் எந்தப்புத்தகமும் மிஞ்ச முடியாது.

## III தேவனுடைய ஒப்பிட முடியாத சபை

இவ்வுலகில் சபையை விட பெரிய அல்லது உயர்ந்த அமைப்பு எதுவுமே இல்லை. இந்த சபைக்காகத்தான் இயேசு கிறிஸ்து தம்முடைய ஜீவனையே விட்டார். கர்த்தருடைய சபையானது தேவனால் வடிவமைக்கப்பட்டது ( எபேசியர் 3 : 9,10 ); கிறிஸ்துவின் இரத்தத்தால் வாங்கப்பட்டது ( அப்போஸ்தலர் 20 : 28 ) பரலோகத்திற்கு செல்லக்கூடியதாயிருக்கிறது ( I தெசலோனிக்கேயர் 4 : 16,17 ); அதற்கு கிறிஸ்து தலையாயிருக்கிறார் ( எபேசியர் 1 : 22,23 ) இந்த சபையால் தேவன் தொழுதுகொள்ளப்படுகிறார், போற்றப்படுகிறார் (யோவான் 4 : 24; எபேசியர் 3 : 20 , 21).

இது சுவிசேஷ சபையாயிருக்கிறது (I கொரிந்தியர் 15 : 1-4); இது கீழ்ப்படிகின்ற சபையாயிருக்கிறது (அப்போஸ்தலர் 2 : 42); இது ஜெபிக்கின்ற சபையாயிருக்கிறது ( I தெசலோனிக்கேயர் 5 : 17 ); இது ஒற்றுமையான சபையாயிருக்கிறது (அப்போஸ்தலர் 2 : 44 ; 4 : 32) இது சுவிஷேத்தை அறிவிக்கின்ற சபையாயிருக்கிறது (அப்போஸ்தலர் 8 : 4). இது வெற்றியுள்ள சபையாயிருக்கிறது ( மத்தேயு 16 : 18 ). இந்த மகிமையான ராஜ்யத்தின் அற்புதத்தன்மை இதற்கு மேலும் மேம்படமுடியாது. தேவனுடைய சபையில் அங்கத்தினராக எல்லோருக்கும் சந்தோஷமாக நம்பிக்கை இருக்கிறது. ●

சிறுவர் பகுதி

# எலிசாவின் எலும்புகளிடமிருந்து...

Bro. ஏபில் நாயகம்

எனக்குப் பிரியமான சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மீண்டும் இந்த இதழின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அனைவரும் நலமாக இருக்கிறீர்களா? சரி, குழந்தைகளே ! நாம் இந்த மாதத்திற்கான பாடம் என்னவென்று பார்ப்போம். வாருங்கள் ! படிக்கலாம்.

பழைய ஏற்பாட்டில் எலிசா என்ற தேவ மனிதன் ஒருவர் இருந்தார். அவர் ஒரு வல்லமைமிக்க தீர்க்கதரிசியாகவும், இஸ்ரவேல் மக்களுக்கு தைரியம் தருகின்ற ஒரு தலைவனாகவும் இருந்தார். அவர் தன்னுடைய நாட்களில் பல அற்புதங்களைச் செய்தார். அந்த தேவ மனிதன் மரித்துப்போனபின், அவரை ஒரு கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள்.

ஒரு வருடம் கழித்து, மரித்துபோன மனிதன் ஒருவனை, எலிசாவை அடக்கம் பண்ணின அதே கல்லறையில் வைத்தார்கள். நன்றாகக் கவனியுங்கள்! அந்த மரித்த மனிதனின் பிரேத உடல் எலிசாவின் எலும்புகளில் பட்டபோது, அந்த மனிதன் மீண்டும் உயிரடைந்து, தன் கால்களை ஊன்றி எழுந்தான். ஆனால், இந்த அற்புதத்தைப் பற்றி அவ்வளவாக யாரும் பேசுவதில்லை. சரி, இந்த சம்பவம் ஏன் நமக்கு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது? நிச்சயமாக ஒரு நோக்கத்தோடு தான் பரிசுத்த ஆவியானவர் இதை வெளிப்படுத்தியிருப்பார். இதிலிருந்து தேவன் இஸ்ரவேலுக்குக் கற்பித்த இரண்டு பாடங்கள் உண்டு. அதைத்தான் நாம் இந்த மாதம் கற்றுக்கொள்ளப் போகிறோம்.

1. எதிரிகளுக்குப் பயப்படவேண்டாம். தேவன் எந்த நிலைமையிலும் வெற்றி தர வல்லவர். எலியா மரித்துப்போய், எலிசாவின் எலும்புகள் மட்டும் தான் மிஞ்சி இருக்கிறது. ஆனாலும், தேவன் நம்மோடிருப்பார் என்ற முக்கியமான பாடத்தை இஸ்ரவேல் ஜனங்கள் கற்றுக்கொண்டார்கள்.

2. எலிசா என்ற மனிதன் மரித்தான், ஆனால் என்றென்றும் தேவன் மரிப்பது இல்லை ! உயிரோடு இருக்கிறார். என்றைக்கும் நம் அடைக்கலம் அவர் என்பதை உணர்ந்து கொண்டார்கள்.

ஆம் பிள்ளைகளே! எவ்வளவு அர்த்தமுள்ள பாடத்தை இஸ்ரவேல் ஜனங்கள் கற்றுக்கொண்டார்கள் என்று பார்த்தீர்களா?

நாம் மனிதர்களை நம்புகிறவர்களாக இருக்கக்கூடாது. மாறாக, என்றென்றைக்கும் உயிரோடு இருக்கிற, இருக்கபோகிற தேவனை நம்பி விசுவாசிக்கிறவர்களாக இருக்க வேண்டும் சங் 18 : 2 ல் கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார் என்று தாவீது சொல்வது போல நாமும் நம் முழு நம்பிக்கையை தேவன் மீது வைப்போம்,

**Rare Opportunity - Dont Miss**
**Master Degree in Bible**

Duration : 6 Weeks in a year

Teachers : From Abroad - USA



Medium : English

Degree : By Accredited University in USA

Fees : Free

Qualification : Must have a basic degree in Bible

Age : Between 25 -50

**Contact : 99655 - 30385 , 98427 - 30382**

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழுமுகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை செப்டம்பர் மாத இதழில்)**

1. யாரை ஒடுக்காமல் இருங்கள் என்று தேவன் சொன்னார் ?
2. இஸ்ரவேலின் தேவனை தரிசித்தவர்கள் எத்தனை பேர் ?
3. யாரிடத்தில் காணிக்கை வாங்க வேண்டும் ?
4. தேவனுக்கான பொருட்கள் எந்த மரத்தால் செய்யப்பட்டது ?
5. கிருபாசனப் பெட்டிக்குள் வைக்கப்பட்டது என்ன ?
6. யார் ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும் ?
7. தூபவர்க்கத்தை எப்படிச் செய்யக்கூடாது ?
8. இருபது கேரா என்பது என்ன ?
9. தாய் தகப்பனை அடித்து, சபிப்பவன் என்ன செய்யப்படுவான் ?
10. வனாந்திர திசையிலே மேகத்தில் காணப்பட்டது என்ன ?

(யாத்திராகமத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

## ஜீலை மாத வினாக்களுக்கான விடைகள்

1. யோசேப்பின் எலும்புகள் ( 13 : 19 )
2. மோசே -80, ஆரோன்-83 (7 : 7)
3. 40 வருடம் ( 16 : 35 )
4. 2, கெர்சோம், எலியேசர் ( 18 : 3,4)
5. 399
6. ஆரோனும் ஊரும் ( 17 : 22 )
7. மன்னா ( 16 : 31 )
8. மாரா (15 : 23 )
9. 12 நீரூற்றுகள், 70 பேரிட்சை மரங்கள் ( 15 : 27 )
10. தன் நாமதத்தை வீணிலே வழங்குபவர்களை ( 20:7 )

## சரியான பதில் எழுதியவர்கள்

சாலமோன் தனம் - காங்கேயம்
வளர்மதி ராஜ்குமார் - காங்கேயம்
S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
சுபாஷினி - ஈரோடு
மரகதம் திரவியம் - தேனி
M. செல்வம் - வெள்ளலூர்
V.S.S. பால்ராஜ் - மதுரை
மாலதி - மூலனூர்
ஜெமீலா செல்லையா - நெல்லை
அருள்ராஜ் - சென்னை
M. செல்வி நித்யா - காங்கேயம்
உதயகுமார் வைலட் - பூவிருந்தவல்லி
ஜெபதாஸ் - நாசரேத்
இந்திரா ஜெபக்கனி - நாசரேத்
டேனியல் லிவிங்ஸ்டன் - திருச்சி
பழனிவேல் - பொம்மியம்பட்டி
இளவரசி - பொம்மியம்பட்டி
பாக்கியம் சம்பூர்ணம் - ஈரோடு
ஜான்சி - ஆனைமலை
சபிதா - பொம்மியம்பட்டி
மாலதி ஜெயசெல்வம் - சீர்காழி
நிறைமதி - சென்னை
புஷ்பம் முத்துமாணிக்கம் - ஈரோடு
J. அபினேஷ் - மூலனூர்
ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி :** எந்தோரில் அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ சாமுவேலை எழுப்பி வரச் செய்தாளா?

**பதில் :** இல்லை. 1 சாமுவேல் 28 ஆம் அதிகாரத்தில் சவுல் மற்றும் எந்தோரிலைச் சேர்ந்த அஞ்சனம்பார்க்கிற ஸ்திரீ சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே சவுல் நம்பிக்கையற்ற நிலைமையில் இருந்தான். ஆனால், இப்போது நம்பிக்கையற்ற நிலையில் இருக்கும் போது, அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ மூலமாக சாமுவேலின் ஆலோசனையை நாட விரும்பினான். ஆனால், சாமுவேல் உயிரோடிருந்த போது அவருடைய ஞானத்தை சவுல் அவமதித்தான்.

அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ, ஆவிகளோடு பேசுகிறவர்கள் வழக்கமாக செய்வது போல் செய்தாள். அங்கே நடந்த காரியம் ஆச்சரியமானது. சாமுவேல் அங்கே தோன்றினார். சாமுவேல் எழும்பி வந்தது உண்மை தான். ஆயினும், அது அந்த ஸ்திரீ யின் மந்திரத்தால் நிறைவேற்றப்படவில்லை. ஏனெனில், அவள் அங்கே நடந்த சம்பவத்திற்கு ஆயத்தமாகாமல் தான் இருந்தாள். உண்மையில், அவள் சாமுவேல் எழுப்பிவிடுவார் என்று எதிர்பார்க்கவில்லை. அவர் எழும்பி வந்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சாமுவேல் எழுந்து வந்தது அந்த ஸ்திரீயின் வல்லமையினாலோ அல்லது பிசாசின் முகமையினாலோ அல்ல. அது மாய மந்திரமுமல்ல. அங்கே சவுலையும்,அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீயையும் கடிந்து கொள்ளும்படி காரியங்கள் நடந்தது. நடந்தது தெளிவாகவே ஓர் அற்புதம்தான். சாமுவேல் சவுலுக்குக் கொடுத்த செய்தியில் அற்புதத்தின் உண்மைத் தன்மை நிரூபணமாகிறது. வசனம் 19 ல் கர்த்தர் உன்னுயை ஜனமாகிய இஸ்ரவேலையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும், உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரவேலின் பாளையத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்.

சாமுவேல் பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலுக்கெதிரான யுத்தத்தில் வெற்றி பெறுவார்கள், சவுலுக்கு, அவருடைய குமாரர்களும் இதில் செத்துப் போவார்கள். இந்த விபரங்கள் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீகோ, சாத்தானுக்கோ அவனுடைய ஏவலாளுக்கோ தெரியாது. எனவே, அது தேவ ஆவியினால் ஏவப்பட்டுத்தான் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆகவே, சாமுவேல் சவுல் ராஜாவுக்கு முன்பாக தோன்றியது அஞ்சனத்தினாலல்ல. மாறாக, தெய்வீக இடைபாட்டினால்தான் அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீ தன்னுடைய வல்லமையினால் சாமுவேலை எழும்பிவரச் செய்யவும் இல்லை. ●

# நீ மனுஷருக்கேற்றவைகளை சிந்திக்கிறாய் !

Bro. பாண்டியன்

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவபிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மனிதன் மனுஷருக்கேற்றவைகளை சிந்திப்பது என்ன தவறு என்று நீங்கள் யோசிக்கலாம். ஆனால் இதைச் சொன்னது நமது ஆண்டவர் என்பதால் அதன் உட்கருத்தை நாம் தெரிந்துக்கொள்ள வேண்டும். ஆண்டவர் தாம் யூத ஜனங்களால் பல பாடுகள் பட்டு கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்று முன்னறிவித்த போது,பேதுரு தனியே ஆண்டவரிடம், இது உமக்கு நேரிடக்கூடாது என்று தடுத்தான். அந்த சூழ்நிலையில் தான் இயேசு, **எனக்குப் பின்னாகப் போ சாத்தானே, நீ தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்** ( மத்தேயு 16 : 23 ). பிதாவுக்குச் சித்தமானவைகளைச் செய்பவன் தான் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பான் என்ற ஆண்டவர், தானும் பிதாவின்சித்தம் நிறைவேற்றவே வந்ததாகக் கூறினார். அதை மாற்றச் சொன்னதால் பேதுருவைக் கடிந்துக் கொண்டார்.

இன்றைக்கும் தேவசித்தப்படி நடக்க வேண்டிய உங்களை எந்தப் பேதுருவும் திசை திருப்பிவிட முயற்சிக்கலாம். அது நம் உறவுகளோ அல்லது நட்பாகவோ கூட இருக்கலாம். அவர்கள் சொல்வது நம்முடைய நல்லதுக்காக என்றும் தோன்றலாம். ஆனால் தேவனுடைய சித்தம் நிறைவேற யாரும் நம்மை தடுக்க விடக்கூடாது. சபைகூடுதல், சகோதர ஐக்கியம், வேதவகுப்பு, ஜெபக்கூட்டம் போன்ற எந்தக்காரியங்களுக்கும் யாரால் தடை வருகிறதோ அவர்கள் மனுஷருக்கேற்றவைகளைச் சிந்திக்கிறவர்களே. இயேசுவானவர் பேதுருவைக் கடிந்துக் கொண்டதைப் போல் நாமும் கடிந்துகொள்ள எச்சரிப்பாக இருக்க வேண்டும். நோவா காலத்தைப் போலவே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் ஜனங்கள் தங்களுக்கு வரும் அழிவையும், ஆபத்தையும் உணராமல் தங்கள் உலகக் காரியங்களில் ஈடுபாடாய் இருப்பார்கள் என்று ஆண்டவர் எச்சரிக்கின்றார். நாம் தேவனுக்கேற்றவைகளைச் சிந்திக்க வேண்டியவர்கள். அதேபோல் உபத்திரவத்தில் பொறுமையாயிருந்த யோபுவுக்கு அவன் மனைவி

இடறலாய் இருந்ததை நாம் அறவோம் நன்மை, தீமை இரண்டையும் நாம் கடந்து தான் பக்தி வாழ்வில் முன்னேற முடியும். இச்சையடக்கமாய் இருந்த யோசேப்புக்கு போத்திபாரின் மனைவி இடறலாய் இருந்தாள். அவள், மனுஷருக்கேற்றவைகளைச் சிந்தித்து அவனுடைய நல்லொழுக்கத்தைக் கெடுக்க முயற்சித்தபோது, அவன் தேவனுக்கேற்றபடி சிந்தித்து விலகி ஓடினான். நாம் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவசித்தம் ( I தெச 4:3-7).

தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையாய் இருந்த மனுஷன் மோசேயை தேவன் அழைத்தபோது அவன் ஆபிரகாமைப் போல உடனே ஏற்றுக்கொள்ளவில்லை. தனக்கு பேச்சு வராது, மந்த புத்தி என்று மனுஷருக்கேற்றபடி சிந்தித்தான். ஆனால், மோசேயை தேவன் வல்லமையாய்ப் பயன்படுத்தினார் ஞாபகம் வையுங்கள். தேவன் உங்கள் திறமையை எதிர்ப்பார்பதில்லை. மாறாக, உங்கள் நேரமும், கீழ்படி தலையுமே அவர் எதிர்பார்க்கிறார். இதை வாசித்துக் கொண்டிருக்கும் விசுவாசியே தேவனுக்காகப் பேசும் வாய்ப்பு வரும் போது தட்டிக் கழிக்காதே! தேவன் உன்னையும் வல்லமையாய்ப் பயன்படுத்துவார் ஆமென். பவுல் அழைக்கப்பட்ட போது, நான் மாம்சத்தோடும், ரத்தத்தோடும் யோசனை பண்ணாமல் கீழ்ப்படிந்தேன் என்கிறார் ( கலாத் 1: 16 ). இஸ்ரயேல் ஜனம் தேவனுடைய அற்புத அடையாளங்களை நேரடியாக கண்டும் தேவனிடம் விசுவாசமாயிருக்கத் தவறிவிட்டனர். அதேபோலத்தான் இயேசுவின் காலத்திலும் யூத ஜனங்கள் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கவில்லை ! காரணம் அவர்கள் தேவனுக் கேற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கேற்றவைகளையே சிந்தித்தனர். அவர் யோசேப்பின் குமாரர் என்று நினைத்து ஏமாந்தனர். இன்னுமொரு கொடுமை கூடவே இருந்த சீஷரும் இயேசுவை முழுமையாக அறியவில்லை. சதுசேயர், பரிசேயர் என்பவரின் புளித்தமா பற்றி ஆண்டவர் எச்சரித்தபோது, அப்பங்களைக் கொண்டுவர மறந்து போனதால் ஆண்டவர் திட்டுகிறார் என்று சிந்தித்தனர்.

இன்றைக்கும் நம் வாழ்வில் அநேக நன்மைகள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த ஆசீர்வாதங்களையெல்லாம் நாம் சிந்தித்து தேவனிடம் விசுவாசமாயிருப்பதே தேவனுக்கேற்ற சிந்தனை. பல நேரங்களில் ஆண்டவர் சீஷர்களைப் பார்த்துக் கேட்ட கேள்விக்கு நாமும் இன்றைக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

நான் செய்தவைகளை இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்கிறீர்களா? (மாற்கு 8 : 17 ). ஆண்டவர் நமக்கு நன்மை செய்ய நம்மோடு இருப்பதை உணர்ந்து நிதானமாய் நடப்பதே நமக்கு இருக்கும் அழைப்பு! இயேசுவின் தாயாகிய மரியாள் சரியாக தேவனுக்கேற்றபடி சிந்தித்தாள் ( லூக் 2 :19 ). எனவே தான் கானா ஊர் திருமணத்தில் ரசம் குறைவுபட்ட போது, அவர் என்ன சொல்லுகிறாரோ அதன்படி செய்யுங்கள் என்று தைரியமாய் அவளால் சொல்ல முடிந்தது. உங்கள் வாழ்விலும் எந்தக் குறைகளை நீங்கள் சந்திக்க நேர்ந்தாலும் கவலைப்பட வேண்டாம். இயேசு என்ன சொல்கிறாரோ அதன்படி செய்வோம். நம் வாழ்க்கையிலும் ஆச்சரியங்களை நடந்த தேவன் வல்லவராய் இருக்கிறார். ஒருவேளை, உங்கள் பிரச்சனைகள் கோலியாத்தைப் போல பெரிதாக இருக்கலாம். ஆனால் நீங்கள் தாவீதைப் போல நம் தேவன் கோலியாத்தை விடப் பெரியவர் என்று நம்பினால் பிரச்சனைகளை மேற்கொள்ள தேவன் நம் பக்கம் இருப்பார் என்பதை மறவாதே.

தாழ்மை எப்போதுமே தேவனுக்கேற்ற சிந்தையாய் உள்ளது. தேவனுடைய பெட்டிக்கு முன் நடனம் ஆடிய தாவீதை அவன் மனைவி மீகாள் கேலி செய்து மலடி ஆனாள் என்று காண்கிறோம். சாதாரணமாக, நாபாலின் மனைவியாக இருந்த அபிகாயில் தேவனுக்கேற்றபடி சிந்தித்து தாவீதினுடைய அரண்மனையில் ராணியாக உயர்ந்ததையும் நாம் அறிவோம். முதியோர்களை மதிக்க வேண்டும் என்பது தேவக்கட்டளை (லேவி 19 : 32 ). ஆனால், ரெகோபெயாம் வாலிபரின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கொடுத்து இஸ்ரேல் சாம்ராஜ்ஜியமே இரண்டாகப் பிரியக் காரணமானான். இன்றைய இளைஞர்கள் திரைப்படங்களின் நகைச்சுவையைப் பார்த்து முதியோர்களை அற்பமாக நடத்தும் ஆபத்தை நாம் உணர வேண்டும். சிலர், ஆகாப் ராஜா நாபோத்தின் திராட்சத் தோட்டத்தை அபகரித்ததைப் போல் எளியவர்களின் நியாயத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்கள். ஆனால் தேவன் அதைக் கண்டிக்கிறார் (யாத் 23 : 6 ). விசுவாசிகள் எனப்படுகிற நாம் தேவனுக்கேற்றவைகளைச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்நிய நாட்டில் சிறைப்பட்டுப்போன தானியேல் தன்னை மதுபானத்தால் கெடுத்துக் கொள்ளவில்லை. இன்றைக்கு படிப்பு, மற்றும் பணியின் காரணமாக வெளிநாடு செல்பவர்கள் இதில் கவனமாக இருக்க வேண்டும். சிலர் உள்நாட்டிலேயே தங்களைக் கெடுத்துக் கொள்கிறார்கள். அதையெல்லாம் விட்டு நாம் மனந்திரும்பி

தேவனுக்கேற்றவைகளைச் சிந்திப்போமாக. அந்நிய ஸ்திரியின் சிநேகம் ஆபத்தானது. நீ ஜீவமார்க்கத்தைச் சிந்தியாதபடி அவளுடைய நடைகள் மாறி, மாறி விகாரப்படும் (நீதி 5 : 6). தேவனுடைய நினைவுகள் மகிதனுடைய நினைவுகளிலிருந்து மாறுபடுகிறது. நாம் ஒருவேளை, நம்மைப்பற்றி தவறாக நினைத்துக் கொண்டிருந்தாலும் தேவன் நம்மைப்பற்றியும், நம் எதிர் காலத்தைப் பற்றியும் நன்மையாகவே நினைக்கிறார் ( எரே 29 : 11). ஆகவே, வீண் சிந்தனைகளை வெறுத்து வேதத்தில் பிரியமாயிருப்போம். சுயநலத்தைத் தவிர்த்து, திக்கற்ற பிள்ளைகளை விசாரிப்போம். மற்றவர்களைக் குற்றப்படுத்தும் வேலையை விட்டு தன்னைப்போல் பிறரை நேசிக்கப் பிரயாசப்படுவோம். இசைந்த ஆத்துமாக்களாய் ஒருமனமுள்ளவர்களாய் கிறிஸ்து இயேசுவிலிருந்த தேவக்கிருபையை நாமும் அணிந்து கொள்வோம். தேவக்கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ●

## நம் இரட்சகரை சிலுவையிலறைந்த பாவங்கள்

அறியாமை என்னும் பாவம் (அப். 3 : 17)

பகை என்னும் பாவம் ( மத் 7 : 20 )

பொறாமை என்னும் பாவம் ( மாற்கு 5 : 11 )

அவிசுவாசம்என்னும் பாவம் ( யோவான் 1 : 11 )

சுயநலம்என்னும் பாவம் ( மத் 26 : 14 – 16 )

# சத்தியத்தை வலியுறுத்தும் யோவான்

Bro. Clarence Deloach, Jr.

தெய்வீக சத்தியத்தைப் பேச பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்று நாம் விசுவாசிக்கிறோம் (I கொரி 2 : 13 ). இருப்பினும், பரிசுத்த ஆவியானவர் வெவ்வேறு வேதாகம எழுத்தாளர்களின் ஆள்தத்துவம், வார்த்தைப் பயன்பாடு, பாணி போன்றவைகளுக்கு ஏற்ப வார்த்தைகளைத் தெரிந்து கொண்டது போலவே தெரிகிறது. யோவானின் எழுத்துக்களில் இத்தகைய தனித்துவம் வாய்ந்த பாணியை நம்மால் காண முடிகிறது. யோவான் அன்பு, ஜீவன், சாட்சி மற்றும் சத்தியம் போன்ற வார்த்தைகளை அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறார்.

யோவான் தன் I,II,III நிருபங்களில் சத்தியம் பற்றி வலியுறுத்துகிறதைக் கவனியுங்கள் :

## யோவான் சொல்லும் சத்தியம் அறியப்பட வேண்டிய ஒன்று.

I யோவான் நிருபத்தின் மைய நோக்கம் கிறிஸ்துவுக்குள்ளான நம் நம்பிக்கை பற்றியது. அறிந்து கொள்ளுதல் என்பது முக்கிய வார்த்தை. சத்தியத்தை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் முடியும்! அதில் இரகசியமில்லை! அதில் யூகமுமில்லை!

இங்கே, வருத்தப்பட வேண்டிய விஷயம், ஒருவர் தன்னுடைய முயற்சியில் எவ்வளவு தீவிரமாக இருந்து முயற்சித்தாலும் உண்மையாக அவரால் சத்தியத்தை ஒருபோதும் அறிந்து கொள்ளவே முடியாது என்று சிலர் சொல்வது தான். ஒருவர் சத்தியத்தை அறிந்துகொள்ள முடியாதென்றால், அவரால் விடுதலையாகவே முடியாது. ஆனால், சத்தியம் தான் ஒருவரை விடுதலையாக்கும் என்று வேத வசனம் கூறுவதை நாம் மறந்துவிடக்கூடாது (யோவான் 8 : 32).

## யோவான் சொல்லும் சத்தியம் நமக்குள் நிலைத்திருக்க வேண்டும்.

சத்தியம் நமக்குள் நிலைத்திருக்கிறபடியால் சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரையும் யோவான் மெச்சுகிறார், பாராட்டுகிறார் ( II யோவா 3). யோவான் தொடர்ந்து சொல்லும் போது, நாம் உபதேசத்தில் (சத்தியத்தில் ) நிலைத்திருக்க வில்லையென்றால், நாம் பிதாவையும், குமாரனையும் உடையவர்களல்ல என்கிறார் ( III யோவான் 9 ). கிறிஸ்துவின் உபதேசமாகிய சத்தியம் மிகவும் முக்கியமானது, ஆகவே, அதைக் கொண்டு வராதவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது (II யோவான் 9- 11 ). ஆனால், இன்றைக்கு அப்படி நடக்கிறதா?

**யோவான் சொல்லும் சத்தியம் நம்முடைய செயல்பாட்டை ஆளுகை செய்ய வேண்டும்.**

இது சத்தியத்தை அறிந்திருக்கும் அறிவை விட மேலானது. அது வாழ்க்கையில் பயன்படுத்தப்பட வேண்டும். காயு சத்தியத்தில் நடந்தபடியரல் யோவான் அவரை மெச்சினார். கிறிஸ்தவர்கள் உண்மையாக சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று அறிவது யோவானுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. எனவே, சத்தியம் அறியப்படுவது மட்டுமல்ல, அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**யோவான் சொல்லும் சத்தியம் என்பது பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று.**

சத்தியத்தைக் கொண்டு வருபவர்களை நாம் ஏற்றுக்கொள்ளும் போது, சத்தியத்திற்கு நாம் உடன் வேலையாட்களாக மாறிவிடுகிறோம் (III யோவான் ). நாம் சத்தியத்தை நேசிக்கும் போது, போதிக்கும்போது, அதை நடைமுறைப்படுத்தும்போது சத்தியத்தோடு நாம் கூட்டாளிகளாக மாறுகிறோம்.

அர்ப்பணிப்பு உணர்வு குறைவாக இருக்கின்ற இந்த நாட்களில் யோவான் வலுயுறுத்தும் சத்தியத்தைக் கொண்டு நம் இருதயங்களை நம் நிரம்ப வேண்டும். அப்படிச் செய்ய ஆயத்தமா?

## மனதின் பாவங்கள்

தீமையான எண்ணங்களைப்பற்றிய கேடான மனது

(மத்தேயு 5 : 27,28)

சுயமதிப்பைப்பற்றிய மேட்டிமையான மனது

(ரோமர் 12 : 16)

அவிசுவாசத்தைப்பற்றிய சந்தேகிக்கும் மனது

(லூக்கா 24 : 38)

கவலைகளைப்பற்றிய சிந்திக்கும் மனது

(லூக்கா 12: 29)



பறிக்க நினைக்கும் சுயநலமான மனது

(லூக்கா 12 : 17-21 )

# நீங்கள் ஆவிக்குரியவர்கள்

ஓர் ஆவிக்குரிய மனிதன் தேவன் இருக்கிறார் என்பதை எவ்விதசந்தேகத்திற்கும் இடமின்றி விசுவாசிப்பான். அது மாத்திரமல்ல, தன் வாழ்வின் மீது, கர்த்தர் மேலான அதிகாரம் கொண்டிருக்கிறார் என்பதையும் நம்புவான் (சங் 100 : 3; ரோமர் 9 : 21) மற்றும், தன்னைப் படைத்தவரோடு, ஒரு நெருங்கிய உறவை வளர்த்துக்கொள்ளும் வாஞ்சையுடையவனாக இருப்பான். அப்பபோஸ்தலன் பவுல், தேவன் பற்றி, என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவரும் என்று சொல்லுகிறான் (அப். 27 : 23).

ஆவிக்குரிய மனிதன் தன்னுடைய வாழ்க்கையை எப்படி நடத்துவதென்று ஞானம் தனக்கு இயல்பாகவே இருக்கவில்லையென்பதை ஒத்துக்கொள்ளுவான். ( எரேமி. 10 : 23 ) ஆகையால், தான் நடக்க வேண்டிய வழிக்காக, தேவ சிந்தையை பெற்றுக்கொள்ளும்படி விரும்புவான். தேவனுடைய வழிகளைக் குறித்து இரவும், பகலும் தியானிக்கிறவனாக இருப்பான் (சங். 1 : 2).

ஓர் ஆவிக்குரிய மனிதன்,தேவனுக்கு எப்பொழுதும் தன்னைக் கீழ்ப்படுத்தும்படியான, ஒப்புக்கொடுக்கும் ஆவியைப் பெற்றுக் கொள்ளவதற்கான சகல முயற்சிகளையும் எடுப்பான். எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டகளையும், நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும், தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தினான் ( என்று 7 : 10 ). ஒரு ஆவிக்குரிய மனிதன் எஸ்றாவைப் போல தன்னைப் பக்குவப்படுத்துவான். ஒருவன் தன் இருதயத்தைச் சரிப்படுத்தினால், மற்ற எல்லாம் சரியாகிவிடும்.

ஓர் ஆவிக்குரிய மனிதன், தன் வாழ்வின் காரியங்களை நித்திய வாழ்வுக்கான கண்ணோட்டத்துடன் அணுகுவான். ஒருவேளை உபத்திரவங்களையும், பாடுகளையும், இப்பூமியின் வாழ்க்கையில் அனுபவித்தாலும், இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல (ரோமர். 8 : 18) என்பதை முற்றிலும் அறிந்தவனாக இருப்பான்.

ஓர் ஆவிக்குரிய மனிதன், எப்பொழுதும் பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே நாடுகிறவனாக இருப்பான் (கொலோ 3 : 2). எப்பொழுதும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்த காரியங்களுக்கு முதலிடம் கொடுப்பான் ( மத் 6 : 33 ). தன்னுடைய வாழ்வின் தேவைகளுக்காக தேவனையே முற்றிலும் சார்ந்திருப்பான். ●

# நாவு

Bro. Francis David

**ப**ரிசுத்த வேதாகமத்திலுள்ள புத்தகங்களில் ஒரு சிறிய புத்தகமாக யாக்கோப்பு எழுதின நிருபம் இந்தாலும், இது நமக்குப் பயன்தரும் பல சிறப்பான செய்திகளைத் தனக்குள்ளாக அடக்கியுள்ளது. கிறிஸ்தவம் ஒரு அன்றாட மார்க்கம் என்பதை இந்நூல் வலியுறுத்திக் கூறுகிறது. அநேக சமயங்களில் நாம் நம்முடைய மார்க்கத்தைக் குறித்து பெருமை பாராட்டுகிறோம். ஆனால், நம்முடைய வாழ்வில் அதை நடைமுறை படுத்துகிறோமா? நாம், நமது மார்க்க நீதிகளை நடைமுறைப்படுத்தாவிட்டால், நம்முடைய மார்க்கம் வீணான மார்க்கம் என்று யாக்கோபு கூறுகிறார்.

யாக்கோப்பு 1 : 26 இப்படிச் சொல்கிறது. உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து தன்னை தேவ பக்தியுள்ளவன் என்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும் ஒரு கிறிஸ்தவனாயிருந்து நாம் மற்றவர்களிடம் பேசும் போது, நம்முடைய மார்க்கம் எதை வெளிப்படுத்துகிறது?

யாக்கோபு மூன்றாம் அதிகாரத்தில் நாவைக் குறித்து ஆசிரியர் பேசுகிறார். சரீரத்தில் நாவு சிறிய அவயவமாயிருந்தும், அநேக சமயங்களில் அதை அடக்குவது மிகுந்த சிரமம் என்று கூறுகிறார். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும் படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும் கடுங்காற்றுகளால் அடிபட்டாலும் அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும், பெருமையானவைகளைப்பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டை கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள்சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது. சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனிதனாலும் கூடாது (யாக் 3 : 3-8).

யாக்கோபு ஆசிரியர் எவ்வளவு நேர்த்தியாக நாவின் இயல்பைக் குறித்து விவரித்திருக்கிறார் பாருங்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் நாவுகளால் மற்றவர்களோடு பேசும்போது, நாம் யார் என்பதை அது வெளிப்படுத்தும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய நாவு விஷயத்தில் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். **கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள்** (எபே 4 : 29) என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

நம்முடைய கர்த்தர் ஒருபோதும் தன்னுடைய நாவை வீணாக உபயோகித்ததில்லை. **ஏனெனில், அவர் பாவஞ் செய்யவில்லை,** அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று அவரைப் பற்றி எழுதியுள்ளது (I பேது 2 : 22). மேலும், பேதுரு இவ்விதம் கூறுகிறார், **ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கடபத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து....** (I பேது 3 : 10) இன்னும் அப்போஸ்தலன் பவுல் பிலிப்பியரில், **...கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரராக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள்** என்கிறார் (பிலி 1 : 27).

அடுத்து முக்கியமாக நாம் பார்க்க வேண்டுவது யாதெனில், மற்றவர்களுடனான நம்முடைய காரியத்தில் நாம் எப்பொழுதும் மிகுந்த கவனமாக இருக்க வேண்டுமென்பது. தன்னால் ஆனமட்டும், நன்முறையில் நடந்து கொள்ள வேண்டும். தேவனுடைய பிள்ளைகளாயிருந்து நற்கிரியைகளைச் செய்யும்படியாய் நாம் படைக்கப்பட்டிருக்கிறோம். எபேசியர் 2 : 10 ல் பவுல் இவ்விதம் கூறுகிறார். " நாம் மற்றவர்களோடு பழகும்போது, நம்முடைய ஆளுமை எதைப் பிரதி பலிக்கிறது? நாம் மோசமான, அசிங்கமான மனோபாவம் உள்ளவர்கள் என்று பிரதிபலிக்குமா? இல்லை, நாம் உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தையுள்ளவர்களாயிருந்தால், நாம் யாரை விசுவாசிக்கிறோமோ அல்லது நாம் யாருக்குச் சொந்தமோ அவருடைய தன்மையை அது பிரதிபலிக்கும். '' கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும்மிருக்கக்கடவது " ( பிலி 2 : 5 )நமக்கு உண்மையாகவே கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறதா?

கிறிஸ்தவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர்கள் (I பேது 2, தீத் 2 : 12 , 14) அவர்கள் வேறுபட்டவர்கள் (2 கொரி 6 : 17) அவர்கள் உலகத்துக்கு வெளிச்சமும், பூமிக்கு உப்புமானவர்கள். இயேசுக்கிறிஸ்து இதை மலைப் பிரசங்கத்தில் சொல்லியுள்ளார். மலையின் மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. ஆம், உங்கள் நற்கிரியைகளும், மனுஷரால் பார்க்கப்படும், மறைந்திருக்கமாட்டாது. தொடர்ந்து, இயேசு, " இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலுருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது " (மத் 5 : 13-14) என்றார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூமியிலே வாழ்ந்த எல்லோரிலும் மேலானவராயிருந்து மிகச் சிறந்த முன்மாதிரியை வைத்துள்ளார். அவருடைய வாழ்க்கை நற்கிரியைகளால் நிறைந்திருக்கிறது. ஜனங்களுடனான அவருடைய பழக்கமும், செயல்பாடும் போற்றுதற்குரியது.எப்பொழுதும் சிறந்ததையே செய்தார். அவருடைய சித்தத்தின் வழியில் நாம் நடப்போமாக! நாம் அப்படிச் செய்வோமானால், கிறிஸ்தவத்தை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க எப்பிரச்சைனையும் இராது. நாம் அவருடைய மாதிரியைப் பின்பற்றும்படி, நமக்காகப் பாடுகள் பட்டு, நமக்கு மாதிரியைப் பின் வைத்துப் போயுள்ளார். ●

## நாளும் நடப்பும்

- **71 வது சுதந்திரத்தினத்தையொட்டி 300 மீட்டர் நீளமுள்ள தேசியக்கொடி ஆமதாபாத்தில் தயாரிக்கப்பட்டது.**
- **" நீட் " தேர்வுக்கு விலக்கு : அவசர சட்ட முன்வரைவு சமர்ப்பிப்பு – தமிழக அரசு**
- **மாற்றுச் சான்றிதழிலும் தமிழில் பெயர் விவரம் : புதிய நடைமுறை அறிமுகம் – அரசு தேர்வுத்துறை இயக்குனர்**
- **15 நாட்களுக்குள் டெங்கு முழுமையாகக் கட்டுப்படுத்தப்படும் – சுகாதாரத்துறை அமைச்சர்**
- **இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை முழுமையாக வென்று இந்தியா வரலாற்றுச் சாதனை**